Ceygma Pumps
மண்ணெண்ணெயில் இயங்கும் இங்கிலிஷ் வில்லியர்ஸ் என்ஜின் பொருத்திய பம்புகளுக்கு
யுனைற்றெட் அக்ரோ என்ஜினியரிங்
ஸ்ரான்லி வீதி,
இராசாவின் தோட்டம் சந்தி, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை: ரூ. 1-25

'சிகமா பம்ப்ஸ்'
மின்சாரத்தில் இயங்கும் மோட்டர்கள் எம்மிடம் இருப்பில் உண்டு
யுனைற்றெட் அக்ரோஎன்ஜினியரிங்
533, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆனி 31 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஜ் பிறை 18 (15 — 07 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 197

★ இனப்பிரச்சினைக்குத் தீர்வு

# சொந்த யோசனையை இந்தியா முன்வைக்குமா?

## தமிழர் தாயகம்; மத்தியில் தமிழும் உத்தியோக மொழி முக்கிய அம்சங்களாக இருக்கும்

சென்னை, ஜூலை 15

இலங்கை இனப்பிரச்சினைக்கு இந்தியா தனது சொந்தத் தீர்வு யோசனை ஒன்றை முன்வைக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

டிச 19 யோசனைக்கு அதிகமாகப் புதிய யோசனை எதையும் தன்னால் சமர்ப்பிக்க முடியாது என ஸ்ரீலங்கா அரசு எழுத்தில் அல்லாமல் பூடகமாகத் தெரிவித்துவிட்டது.

அதனால் இந்தியாவே தனது சொந்த யோசனையைத் தயாரிக்க வேண்டும் என்று தமிழக வட்டாரங்கள் மத்திய அரசை வலியுறுத்தி இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கும் கிழக்கும் இணைந்த தனியான சுயாட்சி அமைப்பு (தமிழர் தாயகம்) ஒன்றை நிறுவுதல், தமிழர்களைத் தேசிய இனமாக அங்கீகரித்து மத்தியில் சிங்களத்துடன் தமிழையும் உத்தியோக மொழியாக்குதல் ஆகியவற்றை முக்கிய அம்சங்களாகக் கொண்டதாக இந்திய யோசனை அமையவேண்டும் எனவும் தமிழக வட்டாரங்கள் மத்திய அரசை வற்புறுத்தி இருப்பதாகவும் அறியவருகிறது

இனப்பிரச்சினைக்கு, டிசம்பர் 19 யோசனைக்கும் அதிகமான - தமிழருக்குச் சுயாட்சி வழங்கும் ஆட்சிமுறை ஒன்றை உருவாக்கும் விதத்தில் ஸ்ரீலங்கா புதிய யோசனைகளை முன்வைக்க வேண்டும் என எதிர்பார்த்து—

திரு. ராஜீவ் காந்தி இம்மாத முற்பகுதியில் ஸ்ரீலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் புதிய யோசனைகளை முன்வைக்குமாறு கேட்டிருந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### மக்கள் பட்டினி!

யாழ்ப்பாணம், ஜூலை 15

தாளையடி, செம்பியன்பற்று, நாகர்கோவில் பகுதிகளில் பெரும் எண்ணிக்கையான மக்கள் உணவின்றி பட்டினியால் பெரும் அல்லற்படுகிறார்கள்.

இந்தப் பகுதிகளில் இராணுவத்தினர் நடத்திவரும் தாக்குதல்கள் காரணமாக பொதுமக்கள் வீடுகளைவிட்டு வெளியேற முடியாத நிலையில் இருப்பதாகவும்—

இதனாலேயே இப்பகுதிகளில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (உ-10)

### சுபநேரம்

15-07-1987

புதன்கிழமை
சுபநேரம்:-
4.30 முதல் 6.00 வரை
ராகுகாலம்:-
12.00 முதல் 1.30 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

# முல்லைத்தீவில் கடும் தாக்குதல்

## இராணுவ நடவடிக்கை தீவிரம்

புதுடில்லி, ஜூலை 15

முல்லைத்தீவு மாவட்டத்தில் முழு அளவிலான இராணுவ நடவடிக்கைகளில் ஸ்ரீலங்கா அரசுப் படைகள் ஈடுபட்டுள்ளன.

புதுக்குடியிருப்பில் 48 மணிநேர ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும் —

வான், தரைத் தாக்குதல்கள் பெருமளவில் முடுக்கி விடப்பட்டிருப்பதாகவும்—

ஏஜன்ஸி செய்திகளை ஆதாரங்காட்டி இந்திய வானொலி, நேற்று இரவுச் செய்தி அறிக்கையில் அறிவித்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் 70 ஆயிரம் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லும்படி பாதுகாப்புப் படையினர் எச்சரித்தனர்.

அதன்பின்னரே தமிழ்ப் போராளிகளுக்கு எதிராக அரசுப் படைகள் தாக்குதலைத் தொடங்கின என்று இந்திய வானொலி மேலும் தெரிவித்தது.

இதேவேளை நேற்றுக் காலை முல்லைத்தீவுப் பகுதியிலிருந்து புறப்பட்ட பஸ்கள் சில நேற்று மாலை யாழ்நகர் வந்து சேர்ந்திருக்கின்றன. (உ-எ-10)

முச்சந்தி முரளி



இல்லைத் தெரியாமல் கேட்கிறேன், வடமராட்சியிலை நிலைமை ஸ்திரப் படுத்திறதுக்கு ஏன் முல்லைத்தீவிலை ஊரடங்கும் தாக்குதல் நடத்தவும் வேணும்......?

பேச்சுக்களில் காலம் கடத்தாது

## இந்தியா ராணுவத் தீர்வு காண வேண்டும்

### வீரமணி கூறுகிறார்

திருச்சி, ஜூலை 15

பேச்சுக்கள் என்று காலம் கடத்துவதை விட்டு, இலங்கை இனப்பிரச்சினைக்கு இந்தியா இராணுவத்தீர்வு காண வேண்டும்.

திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி இப்படித் தெரிவித்தார்.

திருச்சியில் நேற்று திரு. வீரமணி செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போதே இக்கருத்தை வெளியிட்டார்.

திரு. வீரமணி மேலும் தெரிவித்ததாவது;

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக தமிழீழம் ஒன்றைக் காண்பதைத்தவிர வேறு வழியே இல்லை.

இதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆயுத உதவி வழங்கவேண்டும்; அந்த அமைப்புக்கு அங்கீகாரமும் வழங்க வேண்டும்.

தமிழ்நாடு மாநில அரசு, மத்திய அரசிடம் இதை வற்புறுத்தவேண்டும்.

யாழ்குடா நாட்டில் மீண்டும் பெரிய இராணுவத் தாக்குதலை நடத்த ஸ்ரீ லங்கா அரசு முஸ்தீபு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இத்தருணத்தில் பேச்சுக்கள் என்று காலம் கடத்துவதைவிட்டு இராணுவ நடவடிக்கையை இந்தியா மேற்கொள்ள வேண்டும்.

இப்படி திரு. வீரமணி தெரிவித்தார். (இ-எ)

### மீனவரைக் காணவில்லை

காரைநகர், ஜூலை 15

காரைநகரில் வடகடலில் கட்டுமரத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை காணாமற்போய்விட்டார் என்று கூறப்படுகிறது. (இ 73)

# சுட்டிபுரம், வரணியில் நேற்று ஹெலித் தாக்கு!

## அம்மன் ஆலயத்தில் தஞ்சம் புகுந்தோர் பலர் பலி!!

யாழ்ப்பாணம், ஜூலை 15

நேற்றுப் பிற்பகல் மூன்று மணிக்கு சுட்டிபுரம், வரணிப் பகுதிகளில் ஹெலிக்கொப்டர்கள் மூர்க்கத்தனமாக நடத்திய தாக்குதலில் சுட்டிபுரத்தில் ஆலயம் ஒன்றில் தஞ்சம் புகுந்திருந்த பல பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

கோவிலுக்கு அருகாமையில் உள்ள பல கட்டடங்கள் ஹெலிக்கொப்டர்களின் ரொக்கட், மோட்டர்த் தாக்குதல்களுக்கு இலக்காகி தீப்பிடித்தன.

இப்பகுதியில் இருந்து சுமார் 3 மைல்களுக்கு அப்பால் உள்ள முள்ளி இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் முன்னேறும் முயற்சிக்கு முன்னோடியாகவே இத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று மாலை மூன்று மணி அளவில் இத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஹெலிக்கொப்டரில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ரொக்கட் தாக்குதலிற்கு இலக்காகி எரிகாயங்களுக்கு உள்ளான பலரை உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை கொல்லப்பட்டவர்கள் அல்லது காயமடைந்தவர்கள் பற்றிய முழு விவரங்களையும் ஊர்ஜிதம் செய்யும் தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

**இந்தியப் பிரதிநிதிகள்**

இந்திய நிவாரணப் பொருள் விநியோகத்தைப் பார்வையிடுவதற்காக தென்மராட்சிப் பகுதிக்கு நேற்றுச்சென்ற இந்திய செஞ்சிலுவைப் பிரதிநிதிகள் சிலர் இத் தாக்குதலை சற்றுத் தொலைவில் இருந்து அவ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மண்டைதீவு, கோட்டை முகாம்களில் நேற்றும் படையினர் குவிப்பு !

யாழ். கோட்டை இராணுவ முகாமுக்கும், மண்டைதீவு இராணுவ முகாமுக்கும் நேற்று சிப்பாய்களும் இராணுவத் தளபாடங்களும் கொண்டுவரப்பட்டதாகத் தெரியவருகிறது.

நேற்று நண்பகலில் இருந்து மாலை வரை ஹெலிக்கொப்டர்கள் மாறிமாறி, மண்டைதீவு இராணுவ முகாமில் பல தடவைகள் தரையிறங்கிச் சென்றன.

இதேவேளை யாழ் ஆஸ்பத்திரியின் கட்டடப் பகுதிகளை ஹெலிக்கொப்டர் ஒன்று நேற்றுமாலை மெதுவாகப் பறந்து வெகு உன்னிப்பாக கண்காணித்தது. (உ-10)

## வடக்கு - கிழக்கு இடைத் தேர்தல்கள் மீண்டும் ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 15

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காலியாக உள்ள நாடாளுமன்றத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்கள் மீண்டும் பின்போடப்பட்டன.

இடைத்தேர்தல்களுக்கான நியமனப் பத்திரங்கள் இன்று ஏற்கப்படவிருந்தன.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் பணிப்பின்பேரில் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன—

இப்படி தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வா தெரிவித்தார்.

16 தொகுதிகளில் இடைத்தேர்தல்கள் நடத்தப்படவிருந்தன.

இவற்றில் திருகோணமலை, பட்டிருப்பு, வவுனியா, மன்னார் ஆகிய நான்கு தொகுதிகளில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### இன்னர்வீல் கழகம் வழங்கிய உதவி

யாழ்ப்பாணம், ஜூலை 15

வடமராட்சியில் இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் பொதுமக்களுக்கு சத்துணவு மற்றும் பால்மா, உணவு வகைகள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் இன்னர்வீல் கழகம், ஆஸ்பத்திரி நலன்புரிச் சங்கத்தின் மூலம் இந்த உதவிப் பொருள்களை வழங்கியது. (இ-எ)

## டிச. 19 யோசனைக்கு சில திருத்தங்களை இலங்கை சமர்ப்பிக்கும்

கொழும்பு, ஜூலை 15

புதிய யோசனைகளை இலங்கை அரசு முன்வைக்காது; ஆனால் டிசம்பர் 19 யோசனைக்குச் சில திருத்தங்களைச் சமர்ப்பிக்கும்.

இப்படி கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையில் திருத்தங்களுடன் கூடிய டிசம்பர் 19 யோசனையை எடுத்துக்கொண்டு அமைச்சர் காமினி திஸநாயக்கா புதுடில்லி செல்லக்கூடும் என்று கொழும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

திக்கத்தில் பயங்கரம்:

## கணவன்-மனைவி-மகள் ஷெல்லுக்கு பலி

### 10க்கு அதிகமானோர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

அல்வாய் திக்கம் பகுதிகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன் மனைவி, மகள் மூவரும் கொல்லப்பட்டனர்.

பத்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

பருத்தித்துறை இராணுவ முகாமில் இருந்தும் கடல்பகுதிகளில் இருந்தும் கடந்த ஞாயிற்றுக்கிழமை குடியிருப்புப் பகுதிகளை நோக்கி பரவலாக ஷெல்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இத் தாக்குதல்களை அடுத்து பொதுமக்கள் கையில் அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டும், குழந்தைகளைச் சுமந்தபடியும் பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடிக் கொண்டிருந்தனர்.

பாதுகாப்பு தேடி ஓடிய சிலர் சென்சேவியர் ஆலயத்தினுள் தங்கி இருந்தனர்.

அப்பொழுதே அப்பகுதியில் வந்து விழுந்த ஷெல், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரைப் பலி கொண்டது.

சத்தியா சவரிமுத்து (வயது 45) அவரது மனைவி சவரிமுத்து பத்மா லீலாவதி (வயது 40) அவரது மகள் சவரிமுத்து விஜயராணி (வயது 8) ஆகியோரே இம் மூவரும் ஆவர்.

இச்சம்பவத்தில் காயம் அடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ள அதே குடும்பத்தைச் சேர்ந்தவர்களது விவரம் வருமாறு:.

எஸ். புஸ்பராணி, (வயது 28) எஸ். தவக்குமார் (வயது 2), அன்ரன் விஜயகுமார் (வயது 12), அன்ரன் யோகேந்திரன் (வயது 14) (இ-10

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

### தவறிவிட்டது

செல்லத்துரை இராசேந்திரம்என்பவருடைய 530252426X இலக்க முடைய அடையாள அட்டையும் அவருடைய மனைவியின் அடையாள அட்டையும் பர்ஸும் தச்சன்தோப்பு சாவகச்சேரி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் பின்வரும் விலாசத்தில் தயவுசெய்து ஒப்படைக்கவும். செ. இராசேந்திரம், தச்சன்தோப்பு, கைதடி. (1281)

### விண்ணப்பம்

இந்தியாவில் அரசாங்க தொழில் நுட்பக் கல்லூரிகளில் அனுமதிபெற விரும்பும் மாணவ/மாணவிகள் 18ஆம் திகதிக்கு முன் எம்முடன் தொடர்பு கொள்ளவும். உடனேமுற்றேருக்கு முன்னுரிமையுண்டு. தகைமை:- G. C. E. (O/L); 1-7-87 அன்று உள்ளபடி 20 வயதிற்குக் குறைவாக இருக்கவேண்டும். ''ஹரிஹரன் என்ரபிரைஸ்'' 337, பலாலி வீதி, பரமேஸ்வராசந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (1282)

### புத்தகம்

காத்திருந்தது போதும்' வெளிவந்துவிட்டது ''வாழ்க்கைக்கு நலம் தரும் நியூமராலஜி'' தனிப்பிரதி 6/50, பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். தபாலில் பெறுவதாயின் ஒன்பது ரூபா முத்திரைகள் அனுப்பவும். டேவிட் விக்டோரி, 38, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். (1280)


### இடமாற்றம்

ஊர்காவற்றுறை, ஜூலை 15

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையின் கைதடி உப அலுவலக சிவில் தொழில் நுட்ப உத்தியோகத்தர், என். சிவராமன் இம்மாதம் 15 ஆம் திகதிமுதல் யாழ் அபிவிருத்திச் சபை நாவற்குழி உபஅலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார். (இ-16)

## செய்திக்கொத்து

### சம்பள உயர்வு இல்லை

ஊர்காவற்றுறை, ஜூலை 15

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபையின் உப அலுவலகங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கான சம்பள உயர்வுகள் இன்னும் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வருடத்திற்கான சம்பள உயர்வுகள் ஜனவரி மாதத்தில் வழங்கப்பட்டிருக்கவேண்டும். (இ-16)

### அகதிகளுக்கு அன்பளிப்பு

வட்டுக்கோட்டை, ஜூலை 15

மல்லாகம் இ.போ.ச. டிப்போ மல்லாகம் நீதிமன்ற வளவு, மல்லாகம் குழமங்கால் வைரவர் கோவில் ஆகிய இடங்களில் உள்ள அகதிகள் முகாம்களுக்குச் சென்று அங்குள்ள அகதிகளைப் பார்வையிட்டு ஆறுதல் கூறிய மில்க்வைற் தொழிலதிபர் திரு. க. கனகராஜா அங்குள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பாடசாலை உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கினார். (இ-161)

### சுருவிலில் பரவிய வதந்தி

ஊர்காவற்றுறை, ஜூலை 15

சுருவில் கிராமத்தில் கரையோரமாக இராணுவமும் கடற்படையும் கரையிறங்கி விட்டனர் என்று பரவிய வதந்தியால் இப்பகுதி மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி புளியங்கூடல் கிராமத்தை நோக்கி விரைந்தனர்.

பின்னர் விடுதலைப் புலிகள் நவீன ஆயுதங்களுடன் தேடுதல்நடத்தி இத்தகவல் பொய்யானது என கண்ட பின்னர் மக்கள் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பினர்.

வெள்ளிக்கிழமை இச் சம்பவம் நடந்தது.

### பொதுக் கூட்டம்

காரைநகர், ஜூலை 15

காரைநகர் மெய்கண்டான் வித்தியாசாலையில் அம்பாள் கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பின் விசேட பொதுக்கூட்டம் கடந்த வாரம் நடைபெற்றது.

கூட்டத்திற்குதிரு.எஸ் பிரமநாதன் தலைமை வகித்தார்.

மீனவர்களுக்கிடையிலான விசாரணைகளும் இடம் பெற்றன. (இ-73)

### இசை, நடன கல்லூரிக்கு மாணவர் அனுமதி

மட்டக்களப்பு. ஜூலை 15

மட்டக்களப்பு விபுலானந்தர் இசை நடனக் கல்லூரியில் மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை பிரதேச அபிவிருத்தி அமைச்சு கோரியுள்ளது.

வாய்ப்பாட்டு, வயலின், வீணை, மிருதங்கம், பரத நாட்டியம், புல்லாங்குழல் ஆகிய பாட நெறிகளில் பயிற்சி வழங்கப்படும். (இ-21)

### யோகதீபம்

வடமராட்சி. ஜூலை 15

முல்லைத்தீவு யோகபுரம் கொத்தணிப்பாடசாலைகள் இணைந்து 'யோக தீபம்' என்னும் கலை, இலக்கிய மாணவர் சஞ்சிகை ஒன்றை வெளியிட உள்ளன.

யோகபுரம் மகா வித்தியாலயத்தில் 20 ஆம் திகதி இந்த வைபவம் இடம்பெறும். (இ-160)

### தேங்காய் வியாபாரம்

கொடிகாமம், ஜூலை 15

வடமாராட்சியிலிருந்து அகதிகளாக கொடிகாமம் வந்தவர்களில் பலர் தேங்காய் வியாபாரம் செய்து வருகின்றனர்.

தேங்காய் கொண்டு வரும் உற்பத்தியாளர்களிடம் போட்டி போட்டு விலை பேசி இவர்கள் வாங்குவதைக் காணக் கூடியதாக இருக்கிறது. (இ-75)

### 2 வாரகால உதவிப்பொருள்

சாவகச்சேரி, ஜூலை 15

வடமராட்சியில் இருந்து இடம் பெயர்ந்து தென்மராட்சிக்கு வந்துள்ள அகதிகளுக்கு அரச நிவாரணமாக இருவார காலத்துக்குப் போதுமான உதவிப் பொருள்கள் வழங்கப்படவிருக்கின்றன.

இந்த ஏற்பாட்டைச் செய்துள்ள உதவி அரசாங்க அதிபர் திரு பூ. சுந்தரம்பிள்ளை புதிதாக வந்து சேர்ந்துள்ளோர் அப்பகுதி கிராமசேவகர்களிடம் தமது விவரங்களைப்பதிவு செய்யுமாறு கேட்டுள்ளார். (இ-31)

### 250 குடும்பங்கள் மிருசுவில் உசன் பகுதிகளில்

கொடிகாமம், ஜூலை 15

வடமராட்சிப் பகுதியிலிருந்து அகதிகளாக வந்துள்ள சுமார் 250 குடும்பங்கள் உசன், மிருசுவில் பகுதிகளில் உள்ள தமது நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கி உள்ளன.

மிருசுவில் தேவாலய பங்குத்தந்தை அருள் திரு. அமிர்தகுமார் அடிகள் கிராமசேவை அலுவலர் திரு க. குமாரசாமி ஆகியோரின் முயற்சியால் இவர்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன.

### வடமராட்சியில் ஐவர் வீர மரணம்

வடமராட்சி, ஜூலை 15

ஞாயிறன்று வடமராட்சியில் இடம்பெற்ற இராணுவம் - விடுதலைப் புலிகள் நேரடி மோதலில் புலிகள் தரப்பில் ஐவர் கொல்லப்பட்டனர்.

அவர்களின் பெயர்கள் வருமாறு:- சலீம், ஞானி, நகுலன், சுந்தர், வின்டன்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவிக்கின்றனர். (இ-160)

## இந்திய நிவாரணப் பொருள்கள் தீவிரவாதிகளுக்கே கிடைக்கின்றனவாம்

கொழும்பு, ஜூலை 15

இந்திய நிவாரண உதவிகள் யாழ் குடாநாட்டுத் தீவிரவாதிகளுக்குத்தான் போய்ச் சேருகின்றன. இதை நம்பக்கூடியதகுந்தஆதாரங்கள் கிடைத்துள்ளன.

இப்படி அதிகார பூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன என்று அரசு கட்டுப்பாட்டில் உள்ள டெய்லி நியூஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கின்றது.

நாம் அனுப்பும் உணவுப் பொருள்களும் யாழ் குடாநாட்டில் விநியோகிக்கப்படுகின்றன. எமது உணவுப்பொருள்கள் யாருக்குக் கிடைக்கின்றன என்பது எமக்குத் தெரியும்.

இந்தியாவின் நிவாரண உதவிகளுக்குஎன்ன நடக்கிறது என்பதைஎவரும் ஊகித்துக்கொள்ள வேண்டியதுதான் — இப்படி அரசு வட்டாரங்கள் தெரிவித்தன என்று 'டெய்லி நியூஸ்' செய்தி வெளியிட்டிருக்கின்றது. (இ-எ)

## வடமராட்சி அகதிகளுக்கு இணுவில் கிராம முன்னேற்ற அபிவிருத்திச் சங்கம் உதவி

காங்கேசன்துறை, ஜூலை 15

வடமராட்சியிலிருந்து திடீரென புறப்பட்டு வந்துள்ள அகதிகளுக்கு உடனடி நிவாரணமாக அரிசி, சீனி ஆகியன இணுவில் கிராம முன்னேற்ற அபிவிருத்தி சங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

இணுவில் பகுதிக்கு வந்துள்ள இந்த அகதிகள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக உடுத்த உடுப்புடன் புறப்பட்டு வந்ததால் உடனடி நிவாரணத்தை மேற்படி சங்கம் வழங்கியது.

சங்கத் தலைவர் திரு. செ. இலகுநாதன் தலைமையில் நடந்த இந்த உதவி வழங்கும் வைபவத்தில் இணுவில் ஜெனுடென்ஸ் வர்த்தக நிறுவன நிர்வாகி திரு. அருமைநாயகம் கலந்து கொண்டு பொருள்களை வழங்கினார்.

சங்கச் செயலாளர் திரு. தி. சி. சண்முகலிங்கம், பொருளாளர் திரு. தி. புரந்தரதாசன், கிராமசேவையாளர்திரு எஸ். சச்சிதானந்தம் ஆகியோர் உட்பட மற்றும் சங்க உறுப்பினர்கள் இதற்கான ஒழுங்குகளைச்செய்திருந்தனர். (இ-68)

விடுமுறையில் வெளிநாடு செல்லும்

# படிவங்களுக்கு தட்டுப்பாடு

## அரச ஊழியர் பாதிப்பு

வட்டுக்கோட்டை, ஜூலை 15

இலங்கைக்கு வெளியே விடுமுறையில் செல்வதற்கான விண்ணப்பப் படிவத்தைப் பெறுவதற்கு அரச ஊழியர்கள்பெரும் கஷ்டப்படுகின்றனர்.

இப் படிவத்தை யாழ். செயலகத்திலும், யாழ் கல்வித் திணைக்களத்திலும் பெறமுடிய திருப்பதாக ஆசிரியர்களும் ஏனைய அரச ஊழியர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

இப் படிவத்திற்கு தற்போது பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதால் இதனைப் போட்டோ பிரதி எடுக்க வேண்டிய நிலைமை பலருக்கு ஏற்பட்டு வருகிறது.

மூன்று பக்கங்களைக் கொண்ட இந்த விண்ணப்பப் படிவத்தை போட்டோ பிரதி செய்வதற்கு அதிக செலவாகிறது என்று தெரிவிக்கப்படுகிறது (இ-161)

## மக்கள் முகம்

### சங்குவேலி சனசமூக நிலையம்

மானிப்பாய் ஜூலை 15

சங்குவேலி சனசமூக நிலையப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

பின்வருவோர் நடப்பாண்டு உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்கள்:- திரு. இ. செல்லத்துரை, திரு. எஸ். எம். கந்தையா,

தலைவர்: திரு. பொ. சக்திவேல், உபதலைவர்: திரு. க. சின்னத்தம்பி செயலாளர்: திரு. மு. கமலநாதன். உபசெயலாளர்: திரு இ வரதராசா, தனதிகாரி, திரு க. ச. சிவலிங்கம். கணக்குப்பரிசோதகர்:- திரு. மா. பரராசசிங்கம்.

நிர்வாக சபை உறுப்பினர்கள்:- திரு. மு சிவசுப்பிரமணியம், திரு. சி. திருநாவுக்கரசு, திரு. ச. உருத்திரகுமார், திரு இ. அமிர்தலிங்கம், திரு. எம். எஸ். கணேசு, திரு. ஏ. எஸ். ஐயாத்துரை, திரு. கா. ஜெகநாதன், திரு. பி. உதயகுமார் (இ-90)

யாழ் மாநகரசபைப் பகுதியில்

## ஆரோக்கியமான குழந்தைகளை தெரியும்போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ்-மாநகராட்சி மன்ற ஆட்சிக்குட்பட்ட இடங்களில் வாழும் குழந்தைகளுக்கிடையில் ஆரோக்கியமான குழந்தைகளைத் தேர்ந்தெடுக்கும் போட்டி நடைபெற உள்ளது.

யாழ்-மாநகர சுகாதாரப் பகுதியினரால் ''யுனிசெப்'' திட்டத்திற்கமைய பின்வரும் இடங்களில் போட்டி நடைபெறவுள்ளது;-

பொம்மைவெளி மகப்பேற்று நிலையம் 23-7-87 மு. ப. 9 00 மணி.

மடத்தடி மகப்பேற்று நிலையம் 27-7-87 மு ப. 9.00 மணி.

ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கிடையேயும், இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கிடையேயும் நடைபெற இருக்கும் இப் போட்டி சம்பந்தமான சகல விதிகளையும், விபரங்களையும் அறிய விரும்புவோர் யாழ்-மாநகர சுகாதாரப் பகுதியுடன் தொடர்புகொள்ளுமாறு கோரப்படுகின்றனர். (இ)

வயாவிளான் -- பலாலி

## நிவாரணம் பெறுதோரை தொடர்புகொள்ளக்கோரிக்கை

பலாலி, ஜூலை 15

வயாவிளான்-பலாலிப் பகுதி கிராம சேவகர்கள் பிரிவில் இருந்து இடம் பெயர்ந்து இன்னும் எந்தவொரு நிவாரண உணவுப் பொருளையும் பெற்றுக்கொள்ளாதோர் பலாலி-வயாவிளான் கிராம சேவகர் திரு. உலகநாதனுடன் தொடர்பு கொண்டு தமது நிவாரணப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

வயாவிளான்-பலாலியில் இருந்து இடம் பெயர்ந்து வளலாய், இடைக்காடு, பத்தமேனி அச்சுவேலி, மாவிட்டபுரம், வீமன்காமம், காங்கேசன்துறைப் பகுதியில் வசித்து மீண்டும் இடம் பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்ற மக்கள் குறிப்பிட்ட கிராம சேவையாளருடனோ அன்றித் தாம் தங்கியிருக்கும் பிரிவுக் காரியாதிகாரியிடமோ உடன் தொடர்பு கொண்டு நிவாரண ஒழுங்குகளைச் செய்து கொள்ளுமாறுவேண்டப் பட்டுள்ளனர். (இ-119)

கொச்சிக்கடையில்

## யாழ் தமிழரிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணம் மீட்கப்பட்டது

வேலணை, ஜூலை 15

கொழும்பு சென்றிருந்த யாழ்ப்பாணத் தமிழர் இருவரிடம் கத்தி முனையில் கொள்ளையடிக்கப்பட்ட 2,900 ரூபாவை நலன் காக்கும் குழு மீட்டுச் கொடுத்தது

சம்பவம்பற்றித் தெரியவருவதாவது:

கொழும்பு சென்றிருந்த யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைச் சேர்ந்த திரு. அ. யேசுதாசன், குருநகரைச் சேர்ந்தவரும், விளையாட்டமைச்சு உத்தியோகத்தருமான திரு. கே. பீலிக்ஸ் ஆகிய இருவரும்கொச்சிக்கடையிலிருந்து கோட்டைநோக்கி வந்து கொண்டிருந்தனர்.

அப்போது கிறிஸ்கத்தியுடன் இவர்களை இடைமறித்த கொள்ளைக் கோஷ்டி ஒன்று இவர்களிடம் இருந்த பணத்தைப் பறித்துச் சென்றது

யாழ்ப்பாணம் திரும்புவதற்கே பணமில்லாத நிலையில் நின்ற இவர்கள் இருவரும் தாம்தங்கியிருந்த விடுதிக்குச் சென்று நிலைமையைத் தெரிவித்தனர்.

இதனை அடுத்து அப்பகுதியில் உள்ள தமிழர்— சிங்களவர் நலன் காக்கும் குழுவிடம் இத் தகவல் தெரிவிக்கப்பட்டது

இக்குழு உடனே சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று சந்தேக நபர் ஒருவரைக் கைதுசெய்தது.

இதன்பின் [illegible] அரை மணி நேரத்தில் பிடிக்கப்பட்டனர்.

இவர்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணமும் மீட்கப்பட்டது. (இ-167)

நிந்தவூர் பிரதேச சபைக்கு

## பஸ் கண்டக்டர் தலைமையில் சுயேச்சைக் குழு

அம்பாறை, ஜூலை 15

அம்பாறை மாவட்டத்திலுள்ள நிந்தவூர் பிரதேச சபைத்தேர்தலில், பஸ் கண்டக்டர் ஒருவரது தலைமையிலான சுயேச்சைக் குழு ஒன்றும் போட்டியிடுகின்றது.

கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபையின் அம்பாறை டிப்போவைச் சேர்ந்த ஜனாப்.ஏ. அப்துல் சபூர் என்பவரது தலைமையிலான இந்த சுயேச்சைக் குழுவில் இடம் பெற்றுள்ள பன்னிரண்டு வேட்பாளர்களும் சாதாரண தொழிலாளர்களே.

மேலும் நிந்தவூர் பிரதேச சபைக்கு ஐ.தே. கட்சிக்குழு ஒன்றும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பான சுயேச்சைக் குழு ஒன்றும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

இதே வேளை அம்பாறை மாவட்டத்தின் சகல பிரதேச சபைகளிலும் ஐக்கிய தேசிய கட்சியை எதிர்த்து, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுகின்றன. (இ-14)

### ''யாழ்ப்பாணத்து அலங்கோலங்கள்''

யாழ்ப்பாணம், ஜூலை15

''யாழ்ப்பாணத்து அலங்கோலங்கள்'' என்ற வீடியோ படக் கொப்பி ஒன்றை யாழ் வர்த்தகர் சங்கம் இந்திய தூதரக முதலாவது செயலாளர் திரு. எச்.என். பூரியிடம் கடந்த வாரம் கையளித்தது.

ஹோட்டல் ''ஞானம்ஸ்''ஸில் நடைபெற்ற இச் சந்திப்பின் போது இப்போதைய அரசியல் நிலை சம்பந்தமாகவும், வர்த்தக ஸ்தாபனங்கள் நிலை குறித்தும் திரு.பூரியிடம் எடுத்துக் கூறப்பட்டது.

வர்த்தகர்சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட நீண்ட மகஜர் ஒன்றும் பூரியிடம் கொடுக்கப்பட்டது. (இ-10)

## முஸ்லிம்களுக்கு இனரீதியானகட்சி பெரும் பாதிப்பு என்கிறார் மஜீத்

அம்பாறை, ஜூலை 15

இனரீதியான கட்சி இலங்கைவாழ் முஸ்லிம்களுக்குபெரும்பாதிப்பை ஏற்படுத்தும்.

பிரதித்தபால், தந்தித் தொடர்புகள் அமைச்சரும், கிழக்கிலங்கையின் சிரேஷ்ட அரசியல்வாதியுமான ஜனாப். எம். ஏ. அப்துல் மஜீத் மேற்கண்டவாறு கூறினார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பற்றிக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பிரதிஅமைச்சர் ஜனாப். அப்துல் மஜீத் மேலும் கூறுகையில்:

எமது நீண்டகால அரசியல் அனுபவத்தின்படி முஸ்லிம்களுக்கான தனிக்கட்சி அமைப்பு எதிர்காலத்தில் முஸ்லிம்களின் பெரும்அழிவுக்கே வழிவகுக்கும்.

தனிக்கட்சி அமைப்பு முஸ்லிம் சமுதாயத்தை எங்கு கொண்டுவிடுமோ என அஞ்சவேண்டியுள்ளது.

மிகப் பயங்கரமான இந்தச் சூழ்நிலையை முஸ்லிம்கள் குறிப்பாக எமது இளைஞர்கள் நன்கு சிந்தித்துச் செயல்படவேண்டும்,

முஸ்லிம்கள் கிழக்கில் மட்டும் வாழவில்லை, கிழக்கிற்கு வெளியே வாழும் முஸ்லிம்கள் இதனால் பெரும் தொல்லைகளை அனுபவிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

எனவே முஸ்லிம்கட்சி என்ற மாயையில் சிக்கி எதிர்காலத்தைப் பாழடிக்கக் கூடாது.

இவ்வாறு அவர் கருத்து வெளியிட்டார். (இ-14)

## இரண்டாவது மொழிக்கு ரூ. 500 போனஸ்

கொழும்பு, ஜூலை 15

இரண்டாவது மொழியில் பாண்டித்தியம் பெறும் அரசு ஊழியருக்கு ஐநூறு ரூபா போனஸாக வழங்கும் திட்டம் ஒன்றை அமுல் நடத்துவதுபற்றி பொது நிர்வாகத்துறைஅமைச்சு ஆராய்ந்து வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெறும் சிங்கள ஊழியரும், சிங்களத்தில் பாண்டித்தியம் பெறும் தமிழ் ஊழியரும், ஆங்கிலத்தில் பாண்டித்தியம் பெறும் தமிழ், சிங்கள ஊழியரும் போனஸ் பெறத் தகுதியுடையவர்கள் என்று அறிவிக்கப்படுகின்றது. (இ-எ)

## யாழ்நகரில் 3 நாள் கம்பன் விழா

### வெள்ளியன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை15

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் கம்பன் விழா எதிர்வரும் வெள்ளி (மாலை) சனி (மாலை) ஞாயிறு (காலை மாலை) நடைபெறவுள்ளது.

முதலிரு நாட்களிலும் இவ்விழா நல்லை ஆதீன கலாமண்டபத்திலும், மூன்றும் நாள் விழா நாவலர் கலாசார மண்டபத்திலும் நடைபெறும்.

முதல் நாள் விழாவுக்குக் கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரையும், இரண்டாம் நாள் விழாவுக்கு திரு ச.பொ. பாலசிங்கமும், மூன்றும் நாள் காலை நிகழ்ச்சிக்கு பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளையும், மாலை நிகழ்ச்சிக்கு திரு. ஜெகா. செந்தில்நாதனும் தலைமை வகிப்பார்கள்.

இன்றைய சூழலில்எம்மவரிடையே பதிய வேண்டியது சீதையின் உறுதியா, சுமித்திரையின் தியாகமா, இல்லை கும்பகர்ணனின் வீரமா என்ற பட்டிமண்டபமும் முதல் நாள் இடம்பெறும்.

கவிஞர் இ. முருகையன் தலைமையில் கவியரங்கு இரண்டாம் நாள் இடம்பெறும்.

மூன்றும் நாள் காலை கலாநிதி இ. பாலசுந்தரம் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் திரு.க. சொக்கலிங்கம், வித்துவான் வசந்தா வைத்தியநாதன், பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் ஆகியோர் பங்கு பெறுகிறார்கள். (ச)

## செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் முறையிடும்படி திருமலை அகதிகளுக்கு ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜூலை15

இந்திய நிவாரண உதவி மறுக்கப்படும் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த அகதிகள் ஞானம்ஸ் ஹோட்டலில் இயங்கும்செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் முறையிடும்படி கோரப் பட்டுள்ளனர்.

திருகோணமலை மாவட்ட அகதிகள் நலன் புரிச் சங்கக் குழு ஒன்று கடந்த ஞாயிறு யாழ் செஞ்சிலுவைச் சங்கப் பிரமுகர் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியத்தைச் சந்தித்து திருமலை மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து வடபகுதி வந்துள்ள அகதிகளுக்கு இந்திய நிவாரண உதவி மறுக்கப்படுவது பற்றி முறையிட்டது.

அதைத் தொடர்ந்து திரு பாலசுப்பிரமணியம் முன் கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும்சொன்னதாவது;

திருமலை அகதிகள் முதலில் தங்கள்பகுதிகிராம சேவை அதிகாரிகளுடன் இந்திய நிவாண உதவியைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

கிராம சேவை அதிகாரிகள் உதவ மறுக்கால் அப்பகுதி உதவி அரசஅதிபருடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

அதுவும் பலனளிக்கவில்லை என்றால் அப்பகுதியில் உள்ள செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுடன் தொடர்பு கொள்ளவேண்டும்.

இவைஒன்றும் சரிவராமல் போனால் ஞானம்ஸ் ஹோட்டலில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத்தின் அலுவலகத்துடன் உடனே தொடர்பு கொள்ள வேண்டும்.

இப்படி திரு. பாலசுப்பிரமணியம் தங்களிடம் தெரிவித்தார் என்று திருமலை மாவட்ட அகதிகள் நலன்புரிச் சங்கத் தூதுக்குழுவின் பிரதிநிதி ஒருவர்உதயனிடம் தெரிவித்தார். (இ-எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

பிரார்த்தனையின் சக்தி மகத்தானது. உருக்கமான பிரார்த்தனை தூய உள்ளத்தில் இருந்து வெளிப்படுமானால் அது இறைவனின் உள்ளத்தை உருகச் செய்யும்.

— சுவாமி சிவானந்தர்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073

15.07.1987 த.பெ.இல :- 23


# அவர்களுக்கு ஏன் நிவாரணம் இல்லை?

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அகதிகளாக வந்திருக்கும் திருகோணமலை மாவட்ட மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்படவில்லை என்ற புகார் வந்திருக்கிறது.

மே மாதத்தின் ஒரு வார கால ஊரடங்குச் சட்ட அமுலுக்கு நிவாரணமாக வழங்கப்படும் ஸ்ரீலங்கா அரசின் உணவுப் பொருள்களோ அல்லது இந்திய அரசு வழங்கும் நிவாரணப் பொருள்களோ, திருமலையில் வன்செயல்களால் பாதிக்கப்பட்டு இங்கு வந்திருப்பவர்கள் எவருக்கும் வழங்கப்படவில்லை. அகதி முகாம்களில் இருப்பவர்களுக்குக்கூட இரண்டில் எந்த நிவாரண உதவியும் கிடைக்கவில்லை.

இவர்களுக்கு நிவாரணம் மறுக்கப்பட்டதற்கு அவர்கள் திருமலை வாசிகள் என்பதே காரணம் என்றும் அரசாங்க அதிபருக்கு அனுப்பப்பட்ட மகஜர் ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இப்போது தமிழர்கள் எல்லோருமே அகதிகள் நிலையில் உள்ளவர்கள்தான். இன்று வசதி வாய்ப்புடன் இருந்தவன், நாளை உலகத்தில் தான் தேடிய அத்தனை உடைமைகளையும் இழந்து, கட்டிய உடையோடும், உயிர் இருக்கும் உடலோடும் அகதியாகிவிடும் அவலம் மிகுந்த அட்டூழியக் காலம் இது. உயிர் ஒன்றைக் காப்பாற்றி விட்டால் போதும், பின்னர் வாழ்க்கையைப் பற்றிச் சிந்திப்போம் என்ற நிலையில் எடுத்ததைக் கையில் எடுத்துக் கொண்டு ஓடும் கட்டத்துக்கு தமிழர்களை ஆட்டிப் படைக்கிறது அரக்க அரசாங்கமும் அசுர ஆயுதப்படைகளும்.

தமிழ்ப் பிரதேசம் எதுவாக இருந்தாலும் அது அரசாங்கத்தின் கொலைக்களமாக்கப்பட்டிருக்கிறது. எனவே அகதிகளாகி இருக்கும் தமிழர்களை அவர்கள் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், இவர்கள் இந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று பகுத்துப் பிரித்து வைக்கக்கூடாது.

எல்லோரும் தமிழர்கள், எல்லோரும் மனிதர்கள், எல்லோரும் அகதிகள் என்ற நிலையில் நிவாரண உதவிகள் வழங்கப்படவேண்டும்.

1985, 1986 ஆம் ஆண்டுகளில் அரச படைகளின் காட்டுமிராண்டித்தனம் முழு அளவில் தலைவிரித்தாடியது திருகோணமலை மாவட்டத்தில் தான். அங்கிருந்த தமிழர்களைக் கொன்றொழிப்பது மட்டும் அரசின் நோக்கமாக இருக்கவில்லை. இயன்றவரை தமிழர்களை வெளியேற்றிச் சிங்களவர்களை குடியேற்றி திருமலையைச் சிங்களப் பெரும்பான்மை மாவட்டமாக்கிவிட வேண்டும் என்ற நய வஞ்சகத்தோடு அரசு செயற்பட்டது.

அரசியல் தீர்வு மூலம் சுமுகமான நிலை திரும்பும்வரை, இடம்பெயர்ந்த தமிழர்கள் திருமலைக்குத் திரும்புவது என்பது உயிராபத்து நிறைந்த முயற்சியாகவே முடியும். எனவே அவர்களைத் திருகோணமலை வாசிகள் என்று கணித்து நிவாரணம் வழங்காது புறக்கணிப்பது நியாயமற்றது.

அவர்கள் இப்போது இந்தப் பிரதேச வாசிகள். எனவே இங்குள்ளவர்களுக்கு வழங்கப்படும் சகல நிவாரணங்களும், உதவிகளும் பாகுபாடின்றி அவர்களுக்கும் வழங்கப்படுவதே நியாயம்.

நிவாரணத்தை, புனர்வாழ்வை ஆசை காட்டி குடிபெயர்ந்த திருமலைத் தமிழ் மக்களை அங்கு வருவித்து அவர்களுக்கு மீண்டும் உயிராபத்தை விளைவிக்க அரசு சதித்திட்டம் போட்டு வருகிறது.

ஆசையால் இப்போது வழங்கப்படும் அரசாங்க நிவாரணப் பொருள்களைத் திருமலை மக்களுக்கு வழங்க வேண்டாம் என அது உத்தரவிட்டிருக்கலாம்.

ஆனால் இந்திய நிவாரணப் பொருள்களுக்கு அப்படி எந்தக் கட்டுப்பாடும் இருக்கமுடியாது. யாழ்ப்பாணத்தில் வாழும் சகல மக்களுக்கும் என்றுதான் இந்திய நிவாரணப் பொருள்களை வழங்குகிறது.

நிவாரண உணவுப் பொருள்கள் போதும் என்று கூறும்வரை அள்ளி அள்ளிக் கொடுக்கத்தான் தயாராக இருப்பதாக இந்தியா அறிவித்துள்ளது. அப்படியிருக்க ஏன் இங்கு வாழும் மக்களையே பிரித்து வைத்து நிவாரண உதவி வழங்க வேண்டும்?

இந்திய நிவாரண உணவுப் பொருள்களின் விநியோகத்தைப் பொறுப்பு எடுத்திருக்கும் யாழ் செஞ்சிலுவைச் சங்கம் இதில் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும். திருமலையிலிருந்து பாதிக்கப்பட்டு வந்த எல்லோருக்கும் இந்திய நிவாரணப் பொருள்களை வழங்க நடவடிக்கை எடுப்பது மிக அவசியமானது. அரசாங்கம் தயாரித்த அட்டவணைகளில் திருமலை மக்கள் தவிர்க்கப்பட்டிருந்தால், அகதி முகாம்களில் உள்ளவர்களின் பட்டியல்களைச் செஞ்சிலுவைச் சங்கம் தானே தயாரித்து நிவாரணப் பொருள்களை வழங்க வேண்டும்.

## மாணவர் வகுப்புக்களை பகிஷ்கரித்தனர்

சென்னை, ஜூலை 14

இலங்கைத் தமிழர் மீது நடத்தப்படும் இராணுவத் தாக்குதலைக் கண்டித்து உதகை மண்டலத்தில் மாணவர்கள் வகுப்புக்களை பகிஷ்கரித்தனர்.

அரசு கலைக் கல்லூரி, அரசு பொலிடெக்னிக், அரசு மேல் நிலைப்பள்ளி ஆகியவற்றின் மாணவர்கள் வகுப்புக்களை பகிஷ்கரித்ததுடன் ஊர்வலமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்துக்குச் சென்றனர்.

ஆட்சித் தலைவரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது. (இ-எ)

★ அமெரிக்கக் கொடியுடன் செல்லும்

# குவைத் கப்பல்களை தாக்க வேண்டாம்

## ஈரானுக்கு அமெரிக்கா இறுதி எச்சரிக்கை

வாஷிங்டன், ஜூலை 14

வளைகுடாவில் அமெரிக்கக் கொடியுடன் செல்லும் குவைத் எண்ணெய்க் கப்பல்களைத் தாக்க வேண்டாம்.

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் காஸ்பர் வீய்ன்ஸ் பெர்கர் ஈரான் அரசாங்கத்தை மேற்கண்டவாறு கேட்டு உள்ளார்.

வேண்டுகோளைப் புறக்கணித்து குவைத் எண்ணெய்க் கப்பல்களைத் தாக்கும் அறிகுறிகள் தென்பட்டால், ஈரானின் ஏவுகணைத் தளங்களை அமெரிக்கா தாக்கும்—

இப்படி அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் எச்சரிக்கை விடுத்தார்.

குவைத் எண்ணெய்க் கப்பல்கள் எந்தக் கொடியுடன் வளைகுடாவிற் சென்றாலும் அவை தாக்கப்படும் என்றே ஈரான் தொடர்ந்து எச்சரித்து வருகின்றது.

இதனிடையில் வளைகுடாவில் சென்று கொண்டிருந்த பிரெஞ்சு கொள்கலன் கப்பல் ஒன்று பீரங்கிப் படகினால் தாக்கப்பட்டது. (இ-எ)

## ஆர்ஜன்ரீனா சிக்கன நடவடிக்கை

புவனர்ஸ் அயர்ஸ்,

ஆர்ஜன்ரீனா, பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளது.

சர்வதேச நாணயச் சபையின் சிபாரிசுக்கு இணங்க இதனை ஆர்ஜன்ரீனா அரசு செய்ய உள்ளது.

வளர்முக நாடுகளில் கூடுதல் வெளிநாட்டு கடன்களைக் கொண்ட 3 ஆவது நாடு ஆர்ஜன்ரீனா 5 ஆயிரத்து 100 கோடி டாலர் கடனை வெளிநாடுகளிடம் இருந்து ஆர்ஜன்ரீனா பெற்றுள்ளது. (இ-எ)

## வெளி உலகில்

## பஞ்சாப் உடன்பாட்டை முற்றாக எதிர்க்கவில்லை

### ஹரியானா முதல்வர் கூறுகிறார்

சண்டிகார், ஜூலை 14

பஞ்சாப் உடன்பாட்டை ஹரியானா மாநிலத்தின் புதிய அரசு முற்றாக நிராகரிக்கவில்லை.

மாநில முதலமைச்சர் தேவிலால் கடந்த திங்கள் இதனை வெளியிட்டார்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதம் கடந்த திங்கள் முடிவடைந்தது.

விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசுகையிலே முதலமைச்சர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

முதலமைச்சர் பேசுகையில் மேலும் சொன்னதாவது; பஞ்சாப் உடன்பாட்டை எமது அரசு முற்றாக எதிர்க்கவில்லை.

ஹரியானா - பஞ்சாப் மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் பங்கீடு பிரதேசங்கள் பரிமாற்றம் செய்யப்படுவது ஆகிய விவகாரங்களையே நாம் எதிர்க்கின்றோம்.

இப்படி முதலமைச்சர் தேவிலால் சொன்னார். (இ-எ)

### பேச்சு முடிவு

தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த 52 வெள்ளை இனப்பிரமுகர்கள் தடை செய்யப்பட்டுள்ள ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்கள் முடிவடைந்தன. (இ-எ)

## இந்திய மீனவர் மீது ஸ்ரீலங்கா படையினர் தாக்கு

சென்னை, ஜூலை 14

பாக்குநீரிணையில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் ஸ்ரீலங்கா கடற்படையினரால் தாக்கப்பட்டனர்.

கடந்த ஞாயிறு இச் சம்பவம் நடைபெற்றது.

படகில் இருந்த இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டதாம்.

பிடித்த மீன்களும் சேதப்படுத்தப்பட்டன என்று இராமேஸ்வரம் மீனவர்கள் சங்கப்பிரமுகர் ஆறுமுகம் தெரிவித்தார். (இ-எ)

## விமானத்திலிருந்து விழுந்த குழந்தை!

மெக்ஸிக்கோ, ஜூலை 14

பறந்து கொண்டிருந்த விமானத்தில் இருந்து 13 மாதக் குழந்தை ஒன்று விழுந்தது.

மெக்ஸிக்கோவில் டெபிக் நகரில் இருந்து 400 மைல் தொலைவில் மலைப்பிரதேசம் ஒன்றின் மீது விமானம் பறந்து கொண்டிருந்தது.

அப்போது விமானத்தில் உள்ள அவசர தேவைக்குப் பயன்படுத்தப்படும் கதவு திடீர் எனத் திறந்துகொண்டது.

அந்த அதிர்ச்சியில் பெற்றோரின் மடி மீது இருந்த குழந்தை வெளியே தூக்கி வீசப்பட்டது.

மலைப்பிரதேசத்தில் வீழ்ந்த குழந்தையின் சடலத்தைத் தேடும்பணியில் பாதுகாப்புப் படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். (இ-எ)

### தாக்கப்பட்டாராம்

தெஹ்ரான், ஜூலை 14

ஈரான் ராஜதந்திரி ஒருவரை பிரெஞ்சு எல்லைப் பொலீஸார் தாக்கியதாக ஈரான் குற்றம் சுமத்தியுள்ளது. (இ-எ)

## சமய நிகழ்ச்சிகளில்

### யாகப்பர் ஆலய வருடாந்த உற்சவம்

குருநகர், ஜூலை 15

குருநகர் புனித யாகப்பர் ஆலய வருடாந்த உற்சவம் நாளை 16 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகும்.

பங்குத்தந்தை வண-பிதா பீற்றர் துரைரத்தினம் இதனைத் தெரிவித்தார்.

தினமும் மாலை 5 மணிக்கு பிரார்த்தனையும், திருப்பலியும் இடம் பெறும். எதிர்வரும் 24ஆம் திகதி சற்பிரசாத ஆராதனையும், 25 ஆம் திகதிய திருநாள் கூட்டுத் திருப்பலியும், சுற்றுப்பிரகாரமும் பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும். (இ)

### இன்று மகோற்சவம்

திருநெல்வேலி, ஜூலை 15

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று 15 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.0 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

கடந்த காலங்களில் பத்துத் தினங்களாக இருந்த உற்சவ காலம் இம் முறை பதினைந்து தினங்களாக அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. (இ-143)

# இந்தியா குரைக்கும்; கடியாது என்று ஏன் கூறினேன்?

- தொண்டமான்

அமைச்சர் தொண்டமான் கொழும்பு ஆங்கில நாளிதழ் 'த ஐலண்ட்' ஞாயிறு பதிப்புக்கு அளித்த பேட்டியின் இரண்டாவது பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

கேள்வி: நாட்டுக்கு இந்தியப் பயமுறுத்தல் ஏற்பட்டிருந்த தருணத்தில் பிரார்த்தனை இயக்கத்தை நடத்துவது பற்றி நீங்கள் தடுமாற்றம் அடையவில்லை என்று கூறினீர்கள்.

இந்தியா குரைக்குமே ஒழிய கடிக்காது என்றும் சொன்னீர்கள்.

இந்திய நடவடிக்கை பற்றி ஏனைய அமைச்சர்கள் ஆத்திரப்பட்டுப் போட்டி போட்டுக் கொண்டு கண்டனம் தெரிவிக்கும்போது உங்கள் நிலை வித்தியாசமானதாக இருக்கிறதே!

தொண்டா: இது விஷயத்தில் இந்தியா அளவு கடந்த உணர்வுடன் நடந்து கொண்டது என்று நினைக்கின்றேன். இந்த அடிப்படையில் தான் 'குரைக்கும்; கடிக்காது' என்று சொன்னேன். நடந்த சில சம்பவங்கள் குறித்தே இந்தியா அளவு கடந்த உணர்வுடன் நடந்து கொண்டது. மிகை உணர்வின் பிரதிபலிப்பே இந்திய நடவடிக்கை.

கேள்வி: அளவு கடந்த உணர்வு? அதன் கருத்து என்ன?

தொண்டா: அவர்கள் அளவு கடந்த உணர்வாக இருந்தார்கள் என்பதே அதன் கருத்து.

கேள்வி: அளவு கடந்த உணர்வு பற்றி நீங்கள் என்ன கருதுகின்றீர்கள்?

தொண்டா: இனப்பிரச்சினை விஷயத்தில் இந்தியா உணர்ச்சி வயப்பட்டுள்ளது.

தமிழரின் உரிமைகளை அழிப்பதில் தான் பதவிக்கு வந்த அரசுகள் எல்லாம் ஈடுபட்டு வந்து உள்ளன என்று இந்தியா உணர்கின்றது.

யாழ் குடாநாட்டில் மக்கள் படும் துன்பம் அதிகரித்து வருவது பற்றி அறிந்த பின்னரே இந்தியாவின் இந்த நடவடிக்கை இடம் பெற்றது.

கேள்வி: இந்தியா செய்தது சரி என்று நீங்கள் சொல்கின்றீர்கள்?

தொண்டா: இந்தியா மிகவும் உணர்ச்சி வசப்பட்டு நடந்தது என்று சொல்கின்றேன். இது இப்படித்தான். மற்றவர்களினால் சுற்றிவளைக்கப்பட்ட நிலையில் சிலர் மிகுந்த பொறுமையுடன் இருப்பர். திடீரென்று பொறுமையை அவர்கள் இழந்துவிடுவர்.

கேள்வி: அவர்கள் பொறுமையுடன் இருந்தனர்— இப்படி நீங்கள் கூறுவதன் அர்த்தம் என்ன?

தொண்டா: அவர்கள் (இந்தியா) படிப்படியாக எரிச்சல் அடைந்து வந்தனர். இணைப்பு - சி மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் சந்தர்ப்பம் நெருங்கி வந்த நிலை ஒன்று இருந்தது. பின்னர் இணைப்பு - சி நிராகரிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து படிப்படியாக அவர்களின் எரிச்சல் அதிகரித்து வந்து; அளவு கடந்த உணர்ச்சி படைத்தவர்களாக மாறினர்.

கேள்வி: டிசம்பர் 19 நிலைப்பாடும் இந்த எரிச்சலுக்குக் காரணமா?

தொண்டா; தங்களுடைய முயற்சிகளை குறித்து ஸ்ரீலங்கா எடுத்து வந்த நிலைப்பாடுகளினால் இந்தியாவுக்கு தொடர்ந்து எரிச்சலேற்பட்டு வந்தது.

கேள்வி: உங்களுடைய சக அமைச்சர்கள் இதனைப் பார்க்கும் கோணம் வேறு; நீங்கள் வேறு கோணத்தில் பார்க்கின்றீர்கள்.

தொண்டா: எனக்கு என்று விசேடமான கோணம் எதுவும் இல்லை.

கேள்வி: இது விஷயத்தில் உங்கள் அபிப்பிராயம் சக அமைச்சர்களினதும் பார்க்க முரண்பாடானதாக உள்ளது என்பது தெளிவாகத்தெரிகின்றது.

தொண்டா: நான் இருக்கும் நிலைமையில் விஷயங்களை சரிசமமாகவே பார்க்கின்றேன். சில பிரச்சினைகளை வேறுபட்ட பார்வையில் என்னால் மதிப்பிட முடிகின்றது.

(வளரும்)

## கோட்டை, மண்டைதீவு முகாம்களை அகற்றவேண்டும்

### ராஜீவுக்கு யாழ் வர்த்தகர் மகஜர்

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ் கோட்டை இராணுவ முகாமும், மண்டைதீவு இராணுவ முகாமும் அகற்றப்படாதவிடத்து, வர்த்தகர்கள் உட்பட யாழ் நகர மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் உத்தரவாதம் இல்லை.

யாழ்ப்பாண வர்த்தகர்களாகிய நாம் நிம்மதியாக எமதுவர்த்தகத்தை செய்வதானால் இந்த முகாம்கள் உடனடியாக அகற்றப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ் வர்த்தகர் சங்கம் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு திரு. பூரி மூலம் அனுப்பிய மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகஜரின் அம்சங்கள் சில வருமாறு:

இலங்கையின் கேந்திர நகரங்களில் ஒன்றான யாழ்ப்பாணம், இலங்கை இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல்களாலும், ஷெல்களாலும் சின்னாபின்னமாக்கப்பட்டு மனித சஞ்சாரமற்ற சுடுகாடு ஆக்கப்பட்டுள்ளது.

இதனை இலங்கை — இந்திய செஞ்சிலுவைச்

(4 ஆம் பக்கம் பார்க்க)



## பொய்யாமொழி

குறள்:

அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு.

பொருள் :

அரிய நூல்களைக் கற்றுத் தேர்ந்த [illegible] நம் அறிவு [illegible] ஆராய்ந்து பார்க்கு[illegible] அறியாமை [illegible] அருமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசித்திரம்

தம்பி முரளியே வாரும்! என்ன ஒரு மாதிரித் தயங்கித் தயங்கி வாறாய்? ஏதாவது தப்புத் தண்டா செய்திட்டியே?

எப்பவும் தவறுசெய்து விட்டு அதையிட்டு மனம் சங்கடப் படுகிறதைவிட தப்புச் செய்யாமல் இருக்கிறது தான் நல்லது.

நீ இண்டைக்கு ஆரோடை சண்டை போட்டாய்? சங்கக்கடை மனேச்சரோடையோ?

ஓம், ஓம். நானும் சலிப்பட்டேன், ஊரடங்குச்சட்ட நிவாரணப் பொருள்களிலை அரிசி எடுத்தால் தான் அடுத்த சாமான்கள் தருவம் எண்டு நிக்கினபாம். அரிசி பிரதான உணவுப் பொருள். அதாலை அப்படிச் சொல்லுறதிலை என்ன நியாயம் இருக்கு. ஆனால் சில கடையளிலை குடும்பத்துக்குத் தேவைக்கு அதிகமான அரிசியை எடுக்கச் சொல்லியும் நிர்ப்பந்திக்கினமாம். அரிசியைக் கூடக்குடுத்தால் மற்றச் சாமான்களை குறைச்சுவிடலாம் எண்டு சில கடைக்காரர் நினைக்கினமோ என்னவோ! அல்லாட்டால் கொஞ்சம் பழுதுகண்ட அரிசியை தமிழ்ச் சனத்துக்குத் தள்ளி விடுற திட்டமோ ஆருக்குத் தெரியும்! அரிசியைத்தான் கூடுதலா வாங்கவேணும் எண்ட நிபந்தனைக்கு ஆர் சூத்திரதாரி எண்டு தெரியயில்லை.

★ ★ ★

என்ன யாழ்ப்பாண ஆஸ்பத்திரி விவகாரம் எப்பிடி இருக்கிறது எண்டு பாத்தியே? எப்பவும் இந்த அரசாங்கமும், அதுகின்ரை அதிகாரியளும் காலுக்கு ஏத்த மாதிரிச் சப்பாத்தை வெட்டித் தைக்கிறதை விட, சப்பாத்துக்கு ஏத்த மாதிரி காலை வெட்டிறதிலை விண்ணர்கள்!

மார்ச் 30 இல் ஷெல் லடி பட்டு ஆஸ்பத்திரி நோயாளர் எட்டுப்பேர் செத்ததாலை உலக அரங்கத்திலை பெரிய அவமானம் உண்டாகிவிட்டுது!

உடனை முகாமை அகற்ற வேண்டியதுதான் செய்திருக்க வேண்டிய காரியம். மக்கள் நலன் கருதியிருந்தால் அரசாங்கம் அதைத்தான் செய்திருக்கும். ஆனால் கொழும்பு அரசாங்கத்துக்கு யாழ்ப்பாண மக்களிலை என்ன அக்கறை?

உந்தப் பெரிய ஆஸ்பத்திரியை மூடு எண்டு திடீர் உத்தரவு போட்டினம். அந்த உத்தரவின் உள்விவகாரம் தெரியுமோ...!

ஆஸ்பத்திரியை மூட வேணும் எண்ட மூல மான உத்தரவைப் போட்டவர் எந்த அமைச்சரும் இல்லையாம்! மிக மிக உயரத்திலை இருக்கிறவரின்ரை மிக மிக நெருங்கிய உறவினராம்!

இஞ்சை யாழ்ப்பாணத்திலை அட்டூழியம் செய்யுமாப்போலை, மட்டக்களப்பிலை அட்டூழியம் செய்ய ஒரு விசேஷ படை இருக்கு. அதனை 'ஓவர்சி' பண்ணிற ஒருத்தர் தான் மூல உத்தரவை வழங்கினவராம் எண்டு கேள்வி.

இப்ப ஸ்ரீ லங்கா அரசாங்கத்திலை ஒரு பொது விதி உண்டு. எந்த அமைச்சென்டாலும் பாதுகாப்பு அமைச்சிலை இருந்து வாற உத்தரவு எதையும் மறுக்காமல் அப்பிடியே சிரமேற் கொண்டு அமுல் செய்ய வேணும் எண்டதுதான் அந்தப் பொது விதி.

அதன்படிதான் பாதுகாப்பு அமைச்சிலிருந்து உருவான உத்தரவை சுகாதார அமைச்சு பணிப்புரையாக்கி அவசர அவசரமாய் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பியதாம்.

இந்த உத்தரவுக்கும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

★ வர்ண நிழற்பட பிரதி ஒன்று 5/-மட்டுமே
★ நெகடிவ் (Proce sing) செய்தல் இலவசம்
★ விற்பனை - வர்ண நிழற்பட சுருள்கள்
KODAK - FUJI - KONICA
TUDOR - FORTE
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்,
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

15-07-1987 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்பட பிரதிகள்
★ கம்பியூட்டர் முறையில்
★ குறைந்த செலவில்
★ சிறந்த சேவையில்
பெற்றுக் கொள்ளலாம்.

# இந்தியக் கப்பல்களில் கடுமையான சோதனை

## பாதுகாப்பு அதிகாரிகள் அனுப்பப்பட்டுள்ளனர்

### என்கிறார் அத்துலத் முதலி

கொழும்பு, ஜூலை 15
காங்கேசன் துறை முகத்தில் இறக்கப்படும் இந்திய நிவாரண உணவுப்பொருள்களைக் கடுமையாகச் சோதனையிடுவதற்காக கொழும்பில் இருந்து துறைமுக அதிகாரசபையைச் சேர்ந்த பாதுகாப்பு அதிகாரிகள் அனுப்பப்பட்டுள்ளனர்.

இந்திய உணவுப் பொருள்களை 'அங்குமிங்குமாக' சோதனையிடும் அதிகாரத்துடன் இப்பாதுகாப்பு அதிகாரிகள் கொழும்பில் இருந்து அனுப்பப்பட்டிருக்கின்றனர்.

இத்தகவலை தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

இதுபற்றி அமைச்சர் லலித் அத்துலத் முதலி சொன்னதாவது:

இந்தியக் கப்பலில் கொண்டுவரப்படும் பொருள்கள்பற்றி சிலர் கேள்வி எழுப்பியிருக்கின்றனர்

நடுக் கடலில் கப்பல் வரும்பொழுது உணவுப் பொருள்கள் வேறு பொருள்களாக மாற்றப்பட முடியாதா? என்றும் சிலர் கேட்கின்றனர்.

அப்படி நடக்கும் என்று நான் நினைக்கவில்லை. இது எனது தனிப்பட்ட கருத்து. ஆனால் வாதத்துக்கு இது சாத்தியமானது.

இந்தியக் கப்பலில் கொண்டுவரப்படும் மருந்துவகைகள் தமிழ்ழ விடுதலைப் புலிகளுக்குப் போகின்றன என்பதற்கு குறிப்பிடத்தக்க அளவு தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளன.

யாழ்ப்பாண சிவிலியன்களுக்கான உணவுப் பொருள்களில் கணிசமான அளவு புலிகளுக்கும் சென்று உள்ளது.

இந்திய உணவுப் பொருள்களைக் கொண்டு வந்த ஒரு கப்பலில் பெரும் எண்ணிக்கையில் தீப்பெட்டிகளும்வந்தன. இது வழமைக்கு மாறாக உள்ளது.

எம்மிடம் நிறைய தீப்பெட்டிகள் உள்ளன. உள்ளூர் உற்பத்தியைப் பாதிக்கும் முயற்சியாகத்தான் இந்தியத் தீப்பெட்டிகள் பெரும் எண்ணிக்கையில் கொண்டு வரப்பட்டுள்ளன என்று உற்பத்தியாளர்கள் கூறுகின்றனர். இதைநானும் ஆதரிக்கவேண்டியுள்ளது.

இப்படி அமைச்சர்அத்துலத் முதலி தெரிவித்தார். (இ-எ)

## கோட்டை- -

(3-ம்பக்கத் தொடர்ச்சி)
சங்கப் பிரமுகர்கள் நேரிடையாகவே கண்டுள்ளனர்.

இந்திய மனிதாபிமான உதவியான உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்ட கப்பல்களை கடலில் தத்தளித்த மக்களைக் காப்பாற்ற வந்த மரக்கலங்களாகவே கருதுகிறோம்.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## வித்தா---

(3-ம் பக்கத்தொடர்ச்சி)
சாட்சாத் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், தேசிய பந்தோபஸ்து அமைச்சருமான லலித்துக்கும் சம்பந்தம் இல்லையாம். ஆனால் பாதுகாப்புக்குப் பொறுப்பான அமைச்சர் எண்டவகையிலே அதுக்குள்ளை தன்னைச் சம்பந்தப்படுத்த வேண்டியதாயிற்றும்.

ஆஸ்பத்திரியை மூடக்கூடாது எண்டு நெருக்குதல் வந்த உடனே, உத்தரவைப் போட்ட பக்கத்துக்கும் யாழ்ப்பாண மக்கள் குரலுக்கும் இடையிலே ஒருமத்தியஸ்தராகத்தான் அவர் நடந்து கொள்ள வேண்டியதாய்ப் போயிட்டுதாம்.

ஆஸ்பத்திரியை சமாதானப் பிராந்தியமாக்கிறது, போராளியளோடை பேசிறது, எண்ட 'போர்முலாக்கள்' எல்லாத்தையும் லலித் போட்டுப் பார்த்தார். போராளியள் நிபந்தனையை ஏற்றுக் கொள்ள முடியாது எண்டுசொல்லிப்போட்டு வழுவாடித்தனமாய் நடந்து ஆஸ்பத்திரியை இயங்க அனுமதிச்சார்.

இப்ப அது மறந்த கதையாப் போயிட்டுது. சனத்துக்கும் நட்டமில்லாமல ஆஸ்பத்திரியும் இயங்குது......!

எல்லாம் நல்லதாய் நடக்க வேணும்எண்டது கடவுளின் விருப்பமாய் இருந்து விட்டது!

அலுவலகத்திற்கு
இடவசதி தேவை

பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றின் நிர்வாக அலுவல்களுக்கு யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் இருந்து ஒரு மைல் சுற்றுவட்டாரத்திற்குள், ஆயிரம் சதுர அடி விஸ்தீரணத்துக்குக் குறையாத தரை வசதிகொண்ட வீடு அல்லது பொருத்தமான இடம் தேவை.

தகுந்த வாடகை வழங்கப்படும்.

விண்ணப்பிக்கவும்:
விளம்பர இல: 50
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.

பிரயாண ஒழுங்குகள்
● கனடா ●
கனடா நாட்டிற்கு விசா, பிரயாணச் சீட்டு உடனடியாக ஒழுங்கு செய்து தரப்படும்.
பாஸ்போட், பொண்ட், பிரயாணச் சீட்டுக்கள்
இந்தியன் விசா.
நிப்பொன் ரெலி ரவல்ஸ்
2 G, ஸ்ரான்லி வீதி, - - யாழ்ப்பாணம்.
(3)

# வடக்கில் படிப்படியாக அரசு முன்னேறுகிறது

### அத்துலத் முதலி கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 51
வடபகுதியில் அரசாங்கம் படிப்படியாக முன்னேறிக் கொண்டிருக்கின்றது கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை நகரசபையை ஐக்கியதேசியக் கட்சி ஏற்கனவே கைப்பற்றி விட்டது.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

பன்னல என்னும் இடத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் அத்துலத் முதலி மேலும் சொன்னதாவது;

இப்போது பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தினால் அது தீவிரவாதிகளுக்கு வெற்றியாக முடியும்.

மக்களை கட்சி அடிப்படையில் பிரித்து வைக்கவே தேர்தல் பயன்படுகின்றது.

இன்று தேவைப்படுவது ஒற்றுமையே. ஒற்றுமை இருந்தால் தான் தீவிரவாதத்தை ஒழிக்க முடியும்.

இன்று மக்கள் எதிர்நோக்குவது யு. என். பி, சுதந்திரக் கட்சி பிரச்சினை அல்ல.

பொதுப்பிரச்சினை தான் நம்மை எதிர்நோக்கி உள்ளது.

அதற்கு முதலில் நாம் தீர்வுகாண வேண்டும். அதன் பின்னர் நாம் எத்தனை தேர்தல்களையும் நடத்தமுடியும்.

இப்படி அமைச்சர் பேசினார். (இ-எ)

# கைப்பற்றியபகுதிகளில் தமது நிலையைப் பலப்படுத்தும் முயற்சியில் படையினர்

கொழும்பு, ஜூலை 15
வடமராட்சியில் பிடித்துள்ள நிலைகளைப் பலப்படுத்துவதில் அரசுத் துருப்புகள் முயற்சி செய்து வருகின்றன.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

அஸோஸியேட்டட் பிரஸ் நிறுவனத்துக்கு அளித்த பேட்டி ஒன்றில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:

வடமராட்சிப் பகுதியில் தமிழ்ப் போராளிகள் இடைவிடாது நெடுந்தொலைவு கட்டுப்பாட்டு வெடிப் பொருள்களை வெடித்தும் மோட்டோ பீரங்கிக் குண்டுகளால் தாக்கியும் வந்திருக்கின்றனர்.

போராளிகளை விரட்டி அடிப்பதற்காக முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சியிலும் இராணுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இப்படி அமைச்சர் சொன்னார். (இ-எ)

## சொந்த - - -

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
தார்.

ஆனால் டிச. 19 யோசனைகளுக்கு அதிகமாக எதனையும் முன்வைக்க முடியாது என ஸ்ரீலங்கா உத்தியோகப் பற்றற்ற முறையில் அறிவித்துவிட்டது. டிச. 19 யோசனையையே சிறிய திருத்தங்களுடன் அது மீண்டும் முன்வைக்க உள்ளது. அதற்காக அமைச்சர் காமினி திஸநாயக்க புதுடில்லி செல்வார் எனவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் இந்தியா தனது சொந்த யோசனைகளை வைக்க வேண்டிய காலம் வந்து விட்டதாக தமிழக வட்டாரங்கள் மத்திய அரசுக்கு எடுத்துரைத்து உள்ளனவாம்.

இந்தியா முன்வைக்கும் யோசனை இறுதித் தீர்வாக இல்லாமல் பேச்சுக்கான ஆரம்ப அடிப்படையாக இருக்கும் எனவும் அறியப்படுகிறது.

அந்த யோசனையில்—
தமிழர் தாயகத்தை உறுதிப்படுத்தும் விதத்தில் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைந்த சுயாட்சி அமைப்பு முறை —
தமிழர்களைத் தேசிய இனமாக அங்கீகரிக்கும் விதத்தில் தமிழை மத்தியிலும் உத்தியோக மொழியாக்குதல்—

ஆகிய இரண்டு முக்கிய அம்சங்களும் தவறுது சேர்க்கப்பட வேண்டும் எனவும் மத்திய அரசிடம் வலியுறுத்தப்பட்டிருப்பதாக அறிய வருகிறது. ஈழத்தமிழர்கள் அதற்குக் குறைந்த எதையும் ஏற்கமாட்டார்கள் எனவும் மத்திய அரசுக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளதாம். (அ)

## ஆஸ்பத்திரி கட்டடவேலை மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 15
யாழ். ஆஸ்பத்திரி ஐந்து மாடிக் கட்டட வேலைகள் தற்பொழுது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு 'சமக்கோன்' ஒப்பந்தக்காரரினால் கட்டப்படும் இம் மாடிக் கட்டட வேலைகள் கடந்த சில மாதங்களாகத் தடைப்பட்டிருந்தன. (இ-10)

## வடக்கு - கிழக்கு - - - -

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களை நிறுத்த முயற்சி எடுத்துவந்தது.

ஆனால் வேட்பாளர்களாக வருவதற்கு ஐ. தே. கட்சியினால் அணுகப்பட்டவர்கள் தயக்கம் காட்டினர்.

காலியாக உள்ள நாடாளுமன்றத் தொகுதிகள் வருமாறு:

வடமாகாணம்:
யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், பருத்தித்துறை, உடுப்பிட்டி, மானிப்பாய், சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை, கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், காங்கேசன் துறை.

கிழக்கு மாகாணம்:
திருகோணமலை, பட்டிருப்பு. (இ-எ)

## கொழும்பில் 18தமிழர்கைது

கொழும்பு, ஜூலை 15
அச்சகம் ஒன்றின் உரிமையாளர் உட்பட பதினெட்டுத் தமிழர்களை வாழைத்தோட்டம் பொலீஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட தமிழர் டாம் வீதி, பழைய சோனக வீதி, ஹலஸ்டோர்ப் ஆகிய இடங்களில் உள்ள சில வீடுகளில் தங்கியிருந்தவர்களாவர். (இ-எ)

## பஞ்சாப்பிலும் புலிப்படை!

பஞ்சாப்பிலும் புலிப்படை இயக்கம் ஒன்று செயற்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அமிர்தசரஸ் மாவட்டத்தில் உள்ள மின்சார அலுவலக ஊழியர் நால்வர் கடந்த திங்களன்று சுட்டு கொல்லப்பட்டனர்.

இந்தக் கொலைக்கு தாங்களே காரணம் என 'பிந்தரன் வாலே புலிப்படை' என தங்களை அழைக்கும் இயக்கம் ஒன்று உரிமை கோரியிருக்கிறது. (உ)

## அகதிகளுக்கு உடுபுடைவை சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை15
வடமராட்சி, வலிகாமம் வடக்கு, கிழக்கு ஆகிய பகுதிகளில் பாதிக்கப்பட்டு வெளியேறி உடையின்றி இன்னலுறும் மக்களுக்காக உடுபுடைவைகளைச் சேகரிக்கும் பணியில் பல்கலைக் கழக மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

உடைகளைச் சேகரிக்க வரும் மாணவர்களுக்கு இயன்ற உதவிகளை வழங்குமாறு பொதுமக்கள், வர்த்தகர் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக்கழகங்கள், மாதர் சங்கங்கள், பாடசாலைகள் ஏனைய சமூக நலன்பேணும் ஸ்தாபனங்கள் ஆகியவற்றை யாழ். பல்கலைக்கழக அகதிகள் புனர்வாழ்வு அமையம் கேட்டுள்ளது. (இ-7)

## சுட்டிபுரம் - - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
தானித்ததாகவும் தெரிய வருகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தாம் அவதானித்த விடயங்களை இந்திய உயரதிகாரிகளுக்கு அவர்கள் எடுத்துக் கூறுவர் என்றும் சால்லப்பட்டது.

### பிந்திய செய்தி

சுட்டிபுரம், வரணிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஹெலி தாக்குதல்களில் காயமடைந்த குழந்தை உட்பட இருவர் நேற்றிரவு யாழ் ஆஸ்பத்திரி அவசர பிரிவுக்கு கொண்டுவரப்பட்டனர். (உ-10)

## டிச.19 யோசனை---

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)
புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

அமைச்சர் திஸநாயக்கா இவ்வார இறுதிக்குள் புதுடில்லி செல்லலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரதமர் ராஜீவ் காந்திக்கான ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் கடிதம் ஒன்றையும் அமைச்சர் திஸநாயக்கா எடுத்துச் செல்லலாம் என்றும் கொழும்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (இ-எ)

## விமானமூலம் உணவுப் பொதி:

# இந்தியாவை சாடுகிறார் பாகிஸ்தான் பிரதமர்

டோக்கியோ, ஜூலை 15
அல்லலுறும் யாழ்ப்பாணத் தமிழருக்குவிமானம் மூலம் இந்தியா நிவாரண உதவிகளைப் போட்டதை பாகிஸ்தான் பிரதமர் ஜுனைஜோ கடுமையாகக் கண்டித்திருக்கிறார்.

ஜப்பான் சென்றிருக்கும் அவர் டோக்கியோவில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார். அவர் அங்கு கூறியதாவது:-

இது முறையற்ற ஒரு செயல். நாகரிக உலகில கேள்விப்படாத ஒன்று.

இந்தியாவின் இத்தகைய தன்னேக்கான நடவடிக்கையை இலங்கையின் சுதந்திர இறைமையை மிரட்டும் ஒரு செயலாகவே கருத வேண்டியிருக்கிறது.

'சார்க்கில்' அங்கத்துவம் வகிக்கும் தனது அண்டைநாடு ஒன்றை மிரட்டும் விதத்தில் இந்தியா இப்படி நடந்து கொள்ளலாமா?

முன்பே பேசி முடிவு எடுக்கவேண்டிய விடயம் இது. உணவுப் பொருள்களைப் போட்டு விட்டு பின்னர் ஒப்புக்குப் பேசுவது என்ன நியாயம்?

இனிமேலாவது இந்தியா ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

— இப்படி அவர் சொன்னார். (உ)

## அரச அதிபர் பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், ஜூலை 15
வடமராட்சியில் பாதிக்கப்பட்டு தென்மராட்சிக்கு இடம் பெயர்ந்தோர்க்கான நிவாரணப் பணிகளை யாழ் அரச அதிபர் நேற்று நேரில் பார்வையிட்டார். (உ-7)

# காயமடைந்தோரை தடுத்து வைத்த சிப்பாய்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 15
ஷெல் தாக்குதலினால் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்ட பத்துக்கும் அதிகமான நோயாளர்களை உடுப்பிட்டியில் இராணுவத்தினர் தடுத்து வைத்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை திக்கம், அல்வாய்ப் பகுதிகளில் இராணுவம் நடத்திய தாக்குதலில் காயமடைந்த பலர் உடுப்பிட்டிப் பகுதியில் இராணுவத்தினர் இல்லை என நினைத்து தனியார் வான் ஒன்றில் யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்தனர்.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியை வான் அண்மித்ததும் கல்லூரியில் மறைந்திருந்த இராணுவத்தினர் திடீரென வானை மறித்து சோதனையிட்டனர்.

வானினுள் இருந்தோர் தாம் நோயாளிகள் என தெரிவித்தும் அவர்களைத் தொடர்ந்து செல்ல விடாது மறித்து வைத்த இராணுவத்தினர் நேற்றே அவர்களை விடுவித்தனர். (இ-10)

4 வது ஆண்டு நினைவஞ்சலி

செல்வன்:- சித்திரவடிவேல்
(சித்திரன்)
நீர்வேலி.



அன்னைமடியில்: 1963 - 09 - 06.

அன்பின் பிறப்பிடமே! ஆசையின் ஒருருவே!! இன்ப நிழலாய் வளர்ந்தாய்; ஈகையின் சிறப்பால் உயர்ந்தாய். உண்மையின் உறைவிடமாய் மிளிர்ந்து, ஊரார் உள்ளத்தில் உறைந்து, எல்லோர்க்கும் இனியேனாய் ஏற்றமுற்றாய், ஏற்றமுடன் எம்முள திகழ்ந்து ஒற்றுமையாய் யாவரையும் அணைத்தாய். ஓங்கார நாயகன் தாளடைந்த உனது 4ஆவது ஆண்டின் நினைவு நாளில் கண்ணீர் மலரினால் அஞ்சலி செய்கின்றோம்.

ம. ஆசைப்பிள்ளை (குடும்பம்)
தாய், சகோதரிகள்.
நீர்வேலிச் சந்தி,
நீர்வேலி.
(1284)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 15-07-1987.

P ted and Published by New Uthayan Publi ions (Pvt) Ltd at 292/2 Navalar Road Jaffna on Wednesday July 15, 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org